# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம்
## மாதவரம் பால்பண்ணை, சென்னை - 600051

தமிழ் நாட்டில் கோடைப் பருவத்தில் கால்நடை மற்றும் நாட்டுக்கோழிப் பராமரிப்பிற்கான பண்ணை ஆலோசனைகள்

கறவைப் பசுக்கள் / எருமைகள்

- மாடுகளைக் கோடை வெப்பத்தில் இருந்து காக்க, நல்ல காற்றோட்டம் உள்ள கொட்டகைகள் மற்றும் மர நிழல்களில் அவற்றைப் பராமரிக்க வேண்டும்.
- வெப்பம் மிகுந்த நாட்களில் விடியற்காலை வேளைகளில் மற்றும் சூரியன் மறையும் மாலை வேளைகளில் மாடுகளை மேய்ச்சலுக்கு விட வேண்டும்.
- வெப்பத்தினால் ஏற்படும் அயர்ச்சியைப் போக்கும் வகையில் கால்நடைகளுக்குக் குறிப்பாகக் கறவைப் பசுக்களுக்கு எல்லா நேரங்களிலும் குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- கறவை மாடுகள் / எருமைகளுக்குப் பகல் பொழுதில் 11.00 மற்றும் 3.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் மூன்று வேளை அவற்றின்மீது தண்ணீர் நேரடியாகத் தெளிக்கவோ தெளிப்பான்மூலம் படும்படியோ செய்ய வேண்டும்.
- கோடை வெப்பம் உச்சத்தில் இருக்கும் சமயத்தில் கறவைப் பசுக்களில் வெப்பத் தாக்கம் தென்படுகிறதா என்பதைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டும்.
- பசுந்தீவனப் புற்கள் நடவு செய்வதற்கான பசுந்தீவனப் பண்ணைகளைத் தயார் செய்யவும் (10 சென்ட் மாதிரிப் பண்ணை: 4 சென்ட்டில் புற்கள்(கோ4), 3 சென்ட்டில் தானிய வகைப் பசுந்தீவனம் (கோஎப்எஸ் 29 / கோஎப்எஸ் 31), 3 சென்ட்டில் பயறு வகைப் பசுந்தீவனம் (வேலிமசால், காராமணி), பசுந்தீவனப் பண்ணையைச் சுற்றிலும் தீவன மரங்கள் (அகத்தி, சுபாபுல் போன்றவை).
- கோவிட்-19 கறவை மாட்டுப் பண்ணையாளர்களின் வாழ்விலும் பாதிப்பு ஏற்படுத்திருப்பதால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஒரு லிட்டர் பாலின் விலை ரூபாய் 3 – 5 என்ற அளவில் சரிந்திருக்கிறது. இந்த விலைச் சரிவையும் அதிக உற்பத்திச் செலவையும் போக்க, கறவை மாடுகளுக்கு அளிக்கும் தீவனத்திற்கான உற்பத்திச் செலவு 60-70 விழுக்காடு என்ற அளவில் அவற்றிற்கான தீவன அளவைப் பின்பற்ற வேண்டும். இதற்குத் தங்கள் பகுதியில் கிடைக்கும் தீவனப் பொருள்களைப் பயனுள்ள வகையில் தீவனமாக அளிக்கலாம் மற்றும் அதையே பிரபலப்படுத்தவும் செய்யலாம்.
- மாடுகள் செரிமானம் செய்யத் தக்க வகையில் வைக்கோல், சோளத் தட்டை போன்ற உலர் தீவனத்தை யூரியா அல்லது கரும்புச் சக்கைப் பாகு மற்றும் உப்பு கொண்டு ஊட்டமேற்றிப் பயன்படுத்தலாம்.

- மண்ணில்லாப் பசுந்தீவன (ஹைட்ரோபோனிக்ஸ்) உற்பத்திக்கு வாய்ப்பான இடங்களில் அதைச் செயல்படுத்தலாம்.

- மழை பெய்யத் துவங்கும் காலங்களில் குடற்புழு உண்டாதல் அதிகமாக இருக்கக்கூடும். ஆகையால் ஏதேனும் மருத்துவ ஆய்வகத்தில் அல்லது பல்கலைக்கழகப் பயிற்சி மையத்தில் சாணத்தில் உள்ள குடற்புழு அளவை ஆய்வுசெய்து முறையான கால இடைவெளியில் குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

- மருந்துக் குளியல் அல்லது மருந்துப் பூச்சு அல்லது தடுப்பூசி முறையைப் பயன்படுத்திப் புற ஒட்டுண்ணித் தடுப்புப் பராமரிப்பைச் செய்யலாம்.

- 3-6 மாத வயதுடைய கன்றுகளில் தாதுப்புக் குறைபாட்டைத் தடுக்கும் வகையில் அவற்றின் கொட்டகைகளில் தாதுப்புக் கட்டிகளைத் தொங்க விடவும்.

- கறவைப் பசுக்களில் ஒரு பசுவுக்கு நாள் ஒன்றுக்கு 30 – 50 கிராம் என்ற அளவில் அடர் தீவனத்துடன் தானுவாஸ் தாதுப்புக் கட்டி அளிக்கவும்.

- கறவை வற்றிய பசுக்களில் ஒரு பசுவுக்கு நாள் ஒன்றுக்கு 15 கிராம் என்ற அளவில் அடர் தீவனத்துடன் தானுவாஸ் தாதுப்புக் கட்டி வழங்கவும்.

- சிறந்த பால் உற்பத்திக்கு ஒரு பசுவுக்கு நாள் ஒன்றுக்கு 30 – 50 கிராம் என்ற அளவில் உப்புக் கட்டி (NaCl) அளிக்கவும்.

- சிறந்த பால் உற்பத்திக்கும் மற்றும் தீவிர அசை வயிற்று அமில நோயைத் தவிர்க்கவும் ஒரு பசுவுக்கு நாள் ஒன்றுக்கு 30 – 50 கிராம் என்ற அளவில் சோடியம் பை கார்பனேட் கலவை (பேக்கிங் சோடா) கொடுக்கவும்.

- ஒரு கறவைப் பசுவுக்கு நாள் ஒன்றுக்கு 1 – 2 கிலோ என்ற அளவில் அசோலாக் கலவை அளிக்கலாம்.

- தீவனத்தில் நொதிக்கப்பட்ட ஈஸ்ட் அல்லது ஏதேனும் புதிய வகை சேர்க்கப்பட்டால், அதன் அளவு 10 விழுக்காட்டிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

- மடிவீக்க நோயைக் கட்டுப்படுத்தவும் தூய பால் உற்பத்திக்கும் தானுவாஸ் மஸ்தி-கார்ட் பயன்படுத்தவும்.

- பரிந்துரைக்கப்பட்ட மரபுசார் கால்நடை மருத்துவ முறைகளைப் பண்ணையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவும்.

## செம்மறி மற்றும் வெள்ளாடுகள்

- ஆடுகளைக் காற்றோட்டம் உள்ள கொட்டகைள் மற்றும் மர நிழல்களில் பராமரிக்கவும்.

- ஆடுகளுக்குத் தங்கள் பகுதியில் கிடைக்கும் தீவனப் பொருள்களைப் பயனுள்ள வகையில் தீவனமாக அளிக்கலாம் மற்றும் அதையே பிரபலப்படுத்தவும் செய்யலாம்.

- மண்ணில்லாப் பசுந்தீவன (ஹைட்ரோபோனிக்ஸ்) உற்பத்திக்கு வாய்ப்பான இடங்களில் அதைச் செயல்படுத்தலாம்.

- மழை பெய்யத் துவங்குவதற்கு முன் சாணத்தில் உள்ள குடற்புழு அளவை ஆய்வுசெய்து, அதன் அடிப்படையில் தகுந்த முறையில் குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

- குடற்பகுதியில் உள்ள நச்சு நோய்க்கு (இடி) எதிராக, மே மாதத்தில் தடுப்பூசி அளிக்க வேண்டும்.

- ஜுலை மற்றும் ஆகஸ்ட்டிற்கு இடைப்பட்ட மாதங்களில் நீல நாக்கு நோய்த் தடுப்பூசி போட வேண்டும்.

- மந்தையில் சேர்க்கப்பட்ட புதிய ஆடுகளில் வெக்கை நோய் அல்லது பிற தொற்று நிகழ்வை ஆய்வு செய்ய அவற்றை 25 நாட்கள் தனிமைப்படுத்த வேண்டும்.

- மேய்ச்சல் பற்றாக்குறையால் ஜுன், ஜுலை மாதங்களில் நிகழும் பொதுவான குறைப்பிரசவம் அல்லது குறைபாடுள்ள குட்டி பிறப்பைத் தவிர்க்க, கருத்தரித்த பெட்டை வெள்ளாடுகள் / செம்மறியாடுகளுக்கு 250 – 300 கிராம் அடர் தீவனம் அளிக்க வேண்டும்.

- மழைநீரைப் பயன்படுத்திப் பசுந்தீவன மரக் கன்றுகளை உற்பத்தி செய்யலாம் மற்றும் தீவன மர இலைகளை ஆடுகளுக்குத் தீவனமாக அளிக்கலாம்.

- மேய்ச்சல் நிலங்களில் ஏற்படும் மேய்ச்சல் பற்றாக்குறை காரணமாகப் பயிர்க் கழிவுகள், மரவள்ளித் தழைகள், வெங்காயப் பயிர்க் கழிவுகள், வாழை இலைகள் மற்றும் தண்டுகள் போன்றவற்றைத் தீவனமாக அளிக்கலாம்.

- ஒரு ஆட்டிற்கு நாள் ஒன்றுக்கு 250 – 500 கிராம் என்ற அளவில் அசோலாக் கலவை அளிக்கலாம்.

- ஆடுகளில் புற ஒட்டுண்ணிகளை இல்லாமல் செய்யும் வகையில் தோல் பூச்சிக் கொல்லி / மென்னுண்ணிக் கொல்லிகளைச் செயல்படுத்தலாம்.

- பரிந்துரைக்கப்பட்ட மரபுசார் கால்நடை மருத்துவ முறைகளைப் பண்ணையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவும்.

## நாட்டுக்கோழி

- பண்ணை மற்றும் குஞ்சுப் பொரிப்பகங்களில் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் மற்றும் முகக் கவசம் அணிதல் ஆகிய தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின்

அங்கீரிக்கப்பட்ட குஞ்சுப் பொரிப்பகங்கள் மற்றும் தனியார் குஞ்சுப் பொரிப்பகங்களில் இருந்து கோழிக் குஞ்சுகளை விலைக்கு வாங்கலாம்.

- வெள்ளைக் கழிச்சல் நோய்க்கு எதிராகக் கோழிகளுக்குத் தடுப்பூசி அளிக்க வேண்டும் (7 ஆவது நாள் எப்1 வகை (கண் சொட்டு மருந்து). 28 ஆவது நாள் லசோட்டா (கண் சொட்டு மருந்து), 56 ஆவது நாள் ஆர்டிவிகே தடுப்பூசி).
- கோழிகளுக்கு நாள் முழுவதும் தரமான குடிநீர் கிடைக்கச் செய்ய வேண்டும்.
- கோழிகளில் வெப்ப அயர்ச்சியைப் போக்கத் தரமான குடிநீரில் நெல்லி / மோர் அல்லது எலும்பிச்சைப் பழச்சாறு (0.1 – 0.3 விழுக்காடு வரை) சேர்க்கலாம்.
- வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்க, 1 விழுக்காடு புரத அளவு (சோயா மொச்சை) தீவனத்தில் சேர்க்கவும்.
- இரத்தக்கழிச்சல் நோயைத் தடுக்க உங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் இரத்தக்கழிச்சல் தடுப்பு மருந்தைத் தகுந்த அளவு தொடர்ச்சியாகத் தீவனத்தில் சேர்க்கவும்.
- ஒழுகும் முட்டை இடுவதைப் பெட்டைக் கோழிகள் தவிர்க்கும் வகையில் நாள் ஒன்றுக்கு ஒரு கோழிக்கு 3 – 5 கிராம் கடற்சிப்பி / சுண்ணாம்புக்கல் / குருணை அளிக்கவும்.
- கோழிகளை இட மாற்றுதல், வேறிடத்திற்குக் கொண்டு செல்லல், அலகு வெட்டுதல் மற்றும் தடுப்பூசி அளித்தல் ஆகியவற்றை இரவு நேரத்தில் அல்லது பகற்பொழுதின் குளிர்ந்த நேரத்தில் செயல்படுத்தவும்.
- நாள் ஒன்றுக்கு ஒரு கோழிக்கு 50 கிராம் என்ற அளவில் அசோலாக் கலவை அளிக்கவும்.
- பரிந்துரைக்கப்பட்ட மரபுசார் கால்நடை மருத்துவ முறைகளைப் பண்ணையாளர்கள் பயன்படுத்திக் கொள்ளவும்.

பொதுவான முறைகள்

- பார்வையாளர் வருகையைத் தடை செய்யவும்.
- பண்ணையில் வேலை செய்யும் அனைத்துப் பண்ணைப் பணியாளர்களும் முகக் கவசம் அணிந்து 1 மீட்டர் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்.
- ஏதேனும் பண்ணைக் கால்நடைகள் / கோழிகள் / உற்பத்திப் பொருட்கள் / தேவையானவற்றை விற்றல் மற்றும் வாங்கும்போது 1 மீட்டர் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கவும் மற்றும் பணியாளர்கள் முகக் கவசம் அணியவும்.
- பண்ணைக் கழிவுகளை முறையாக நீக்கம் செய்யவும் மற்றும் பண்ணை வளாகத்தை 1 விழுக்காடு சோடியம் ஹைட்ரோகுளோரைடு கரைசலால் தூய்மைப்படுத்தி, நோய்த்தொற்று இல்லாமல் பராமரிக்கவும்.

- பண்ணை வளாகத்திற்குள் வாகனங்கள் நுழைவதற்கு முன் அவற்றின் சக்கரங்களை (டயர்ஸ்) 1 விழுக்காடு லைசால் கரைசல் கொண்டு நோய் நீக்கம் செய்யவும்.

- கொசு உற்பத்தியைத் தவிர்க்க, கொட்டகையைச் சுற்றிலும் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவும்.

- பண்ணையாளர்கள் முறையான பயிற்சி பெற்றபின், மதிப்புக் கூட்டிய பால் பொருட்கள் தயாரித்து, அவற்றைத் தங்கள் பகுதியில் உள்ள கடைகள், பள்ளிகள், கல்லூரிகளின் அலுவலக உணவகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் சந்தைப்படுத்தலாம்.

- புதிதாக மாடுகள் மற்றும் கோழிகள் வாங்கும்போது தகுந்த தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கவும்.

- தாதுப்புக் கலவை, தாதுப்புக் கட்டி, ராணிக்கெட் தடுப்பூசி, பசுந்தீவனக் கரணை மற்றும் பிற சேவைகளுக்கு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்/உழவர் பயிற்சி மைய்யம் / வேளாண் அறிவியல் நிலையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

**மேலும் விவரங்களுக்கு** தங்கள் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்/உழவர் பயிற்சி மைய்யம்/ வேளாண் அறிவியல் நிலையத்தைத் தொடர்பு கொள்ளவும்.